**கருவூல அலுவலர்-திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை-திருமதி.ந.சித்ரா.,**

ந.க.8070/2017/அ2

நாள். .02.2019

பொருள். பணியமைப்பு - கருவூலம் மற்றும் கணக்கு துறை - திருவண்ணாமலை மாவட்டக் கருவூல அலகில் தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் தட்டச்சர் பணியில் பணிவரன்முறை - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் (தொகுதி - IV) ல் தட்டச்சர் பணிகள் (I Phase of Counselling) 2015-2016-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு திருவண்ணாமலை மாவட்ட கருவூலத்தில் பணிபுரிந்துவரும் தட்டச்சர் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை.
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை -3 கடித எண்.5903 /PSD-F2/2017, Dated.03.10.2017.
2. முதன்மைச் செயலர்/ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை சென்னை-35 அவர்களின் செ.மு.ஆ.எண்.ந.க.42944/2017/சி3, நாள்.13.10.2017.
3. கருவூல அலுவலர், திருவண்ணாமலை அவர்களின் செ.மு.ஆ.எண்.8070/ 2017/அ2, நாள்.01.11.2017.
4. அரசாணை எண்.246 நிதித்துறை நாள்.20.09.2011
5. தொடர்புடைய ஆவணங்கள் / பதிவேடுகள்.

**ஆணை**

""""

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு - IV தட்டச்சர் பணிகள் (I Phase of Counselling) 2015-2016-ன் மூலம் கருவூலக் கணக்குத்துறைக்கு தேர்வாகி பார்வை 2-ல் காணும் முதன்மைச்செயலர் / ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி திருவண்ணாமலை மாவட்ட கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தட்டச்சர் பணிநியமனம் பெற்று திருவண்ணாமலை மாவட்டக் கருவூலத்தில் தட்டச்சராக பணிபுரியும் பணியாளருக்கு, 23(a)ன் கீழ் தட்டச்சர் பதவியில் தனியர் பணியேற்ற நாள் முதல் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாளில் இருந்து தகுதிகாண் பருவத்தை துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | திரு/திருமதி பெயர்/பதவி | த.நா.அ.ப.தே.வ. எண் | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறைப் படுத்தப்பட்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | தி.கலைவாணி | 11 | மா.க.தி.மலை | 01.11.2017 மு.ப | 01.11.2017 மு.ப |

மேற்படி பணிவரன்முறை ஆணை கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வெளியிடப்படுகிறது.

"The Regularization is subject to the outcome of the WPs Pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services 2015 - 2016 recruitment."

[redacted]

மேற்படி, பணியாளர்கள் 3 ஆண்டுகள் தொடர் பணிக்காலத்தில் 2 ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகின்றனர். மேலும், தகுதிகாண் பருவகாலத்திற்குள் சார்நிலை அலுவலர் கணக்கு தேர்வு பாகம்-I & II, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வுகளில் தேர்ச்சி மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினையும் முடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(2/5)

கருவூல அலுவலர் (பொ)
திருவண்ணாமலை.

பெறுநர்
திருமதி. தி.கலைவாணி,
தட்டச்சர்,
மாவட்ட கருவூலம்,
திருவண்ணாமலை.

நகல் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

1.முதன்மைச் செயலர் / ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை,
சென்னை-35.

2.மண்டல இணை இயக்குநர்,
கருவூலம் மற்றும் கணக்குத்துறை,
வேலூர்-1.

[redacted]